சுருக்கம்

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – ஊராட்சி ஒன்றியங்களில் தினக்கூலி அடிப்படையில் 1982 முதல் 1.4.1997 வரை நியமனம் செய்யப்பட்டு பொருத்துநர் உதவியாளர்களாக பணிபுரியும் நபர்களை – ஊதிய ஏற்ற முறையில் கொணர்ந்து ஏற்கனவே ஊராட்சி ஒன்றியங்களில் காலியாக உள்ள இரவுக்காவலர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களில் 933 நபர்களை – முறையாகப் பணியமர்த்தி – வெளியிடப்பட்ட ஆணைக்கு திருத்தம் – வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண்.131

நாள்: 01.10.2015
மன்மத, புரட்டாசி 14
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.55, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை நாள் 15.6.2006.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கநரின் கடித ந.க.எண்.84441/ 2010/இ2, நாள் 30.8.2012 மற்றும் 6.1.2015.

••••••

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஊராட்சி ஒன்றியங்களில் பொருத்துநர் உதவியாளர்களாக பணியாற்றிய மொத்தம் உள்ள 978 நபர்களில் 1982 முதல் 1.4.1997 வரை நியமனம் செய்யப்பட்ட 933 நபர்களை மட்டும் தகுதியின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களில் காலியாக இருந்த இரவுக்காவலர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களில் சில நிபந்தனைக்களுக்குட்பட்டு முறையாக பணியமர்த்தி அரசு ஆணையிட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்கள் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, இந்நேர்வில் பணிபுரிந்தவர்கள் தற்காலிக பணியாளர்களாக 1.4.2003–ற்கு முன்னதாகவும், 1.4.2003–ற்கு பின்பாகவும் 10 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வரன்முறை செய்யப்பட்டுள்ளது என்றும் இந்நேர்வில் அனைத்து பணப்பயன்களும் பணியாளர்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படும் நிலையில் இவர்களை பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் கொணர்தல் பொருத்தமாக இராது என்று தெரிவித்து மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணைப்படி எந்நாளில் அவர்களது பணிவரன்முறை செய்யப்பட்டு ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டதோ அந்நாளில் இருந்து அவர்கள் முறையான பணியமைப்பின்பாற்பட்டவர்கள் எனக் கொண்டு அந்நாள் 01.04.2003–க்கு பின்னர் நிகழுமாயின் அப்பணியாளர்கள் மட்டும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கொணரப்பட வேண்டும் என தெரிவித்து அரசாணை (நிலை) எண்.55, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 15.6.2006 பத்தி 4–ன் உட்பிரிவு (எ)–க்கு உரிய திருத்தங்கள் வெளியிடுமாறு அரசைக் கோரியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், அரசு கடிதம் எண்.92399/ஓய்வூதியம்/2005–1, நாள் 13.4.2006–ன் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.55, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 15.6.2006ல் பத்தி 4ன் உட்பிரிவு (எ)க்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

| ஆணையில் உள்ளபடி | திருத்தம் |
|---|---|
| இந்நேர்வில் பணிவரன்முறை செய்யப்படும் பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் (Contributory Pension Scheme) கீழ் கொண்டு வரப்பட வேண்டும். | இந்நேர்வில் பணிவரன்முறை செய்யப்படும் பணியாளர்களின் பணி 1.4.2003–க்கு முன்பான நாளில் முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்பட்டவர்களை பழைய ஓய்வூதிய திட்டத்தின் (Old Pension Scheme) கீழ் கொண்டு வர வேண்டும். 1.4.2003 அன்றோ அதற்கு பின்னரோ பணிவரன்முறை செய்யப்பட்டவர்களை புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் (Under New Contributory Pension Scheme) கொண்டு வர வேண்டும். |

4. இந்த ஆணையானது நிதித்துறையின் 30.09.2015 நாளிட்ட அ.சா.கு. எண். 49954/ Finance(RD)/2015–லில் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப்சிங் பேடி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்,
சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக),
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை – 108.
மாநில கணக்காயர், சென்னை–6/18/35.

<u>நகல்:</u>
நிதித்துறை, சென்னை–9,
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

1/10/15
பிரிவு அலுவலர்